Registered as a News paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 ஏப்ரல் (17 - 04 - 1991) புதன்கிழமை ஓசை: 58

## மேலதிகநேர வேலைக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் சகல அரச வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் மருத்துவர்களுக்கான மேலதிகநேர சேவைக்குரிய கொடுப்பனவு உயர்த்தப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் அரச மருத்துவர்களுக்கு மேலதிகமாக வேலைசெய்யும் நேரங்களுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு 25 ரூ முதல் 35 ரூபா வரையுமே வழங்கப்பட்டு வந்தது சுகா (4 ஆம் பக்கம் பார்க்க

## ஐக்கிய இலங்கை மக்கள்கட்சி ஐ. தே. கட்சியுடன் இணைவு

(கொழும்பு)

ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தை நிபந்தனையின்றி ஆதரிக்க முடிவு செய்துள்ளது என அறிவித்துள்ளது.

ருக்மன் சேன நாயக்காவின் தலைமையிலான இந்தக் கட்சி ஐக்கியதேசியக்கட்சியின் இன்றைய கொள்கைகளும் மக்கள் கட்சியின் கொள்கைகளைப் போன்று இருப்பதால் வருங்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படும் என அறிவித்துள்ளது.

## இளைஞர்களைப்பாதுகாக்கும் சிறிலங்காவின் புதிய திட்டம்

(லண்டன்)

சிறிலங்காவில் கைதுசெய்யப்படும் இளைஞர்களில் பலர் அவர்களது சொந்தப் பாதுகாப்புக் கருதியே காவலில் வைக்கப்படுவதாக சிறிலங்கா அரசு காரணம் தெரிவிப்பதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

தென்னிலங்கையின் நிலைவரம் பற்றிக் குறிப்பிட்ட பி. பி. ஸி மேலும் பலர் காணாமல் போன வண்ணமுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதுளைப் பகுதியில் எந்தக் காரணமும் கூறாமல் காவல் துறையினர் பல இளைஞர்களைப் பிடித்துவைத்திருப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மேதினத்தன்று தொழிலாளர்கல்வி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் தினமான மே மாதம் முதலாம் திகதி யாழ் பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கல்வி ஆரம்பிக்கப்படும் என பல்கலைக்கழக அதிகாரி தெரிவித்துள்ளார்.

விவசாயம், மீன்பிடி, இறுவைத்தொழில் ஆகிய பாடநெறிகள் அன்றைய தினம் ஆரம்பித்துவைக்கப்படும் என்றும் இக்கற்கைநெறியை முற்று முழுதாக பயின்று முடிக்கும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகப் பட்டம் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

## வீரவணக்கம்

### கைலாசவாசன்

(யாழ்ப்பாணம்)

எதிர்பாராத வெடி விபத்தொன்றில் கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளரான வகிருஷ்ண பிள்ளை கைலாசவாசன் (அறிபுதன், கைலாஸ்) வீரமரணமடைந்தார். இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

வீரமரணமடைந்த கைலாசவாசனின் ஏழாம்நாள் கிரியைகள் இன்று அவரது வீட்டில் நடைபெறும்.

## பி. பி. ஸியின் உலக ஒளிபரப்புச் சேவை

(லண்டன்)

பிரித்தானியாவின் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் (பி. பி. ஸி) உலக சேவை தொலைக்காட்சி சேவையொன்றினை நேற்று முன்தினம் முதல் ஒளிபரப்பி வருகின்றது.

இந்தச்சேவையை நடத்துவதற்கான அங்கீகாரம் கடந்த வருடம் கிடைத்தது என்றும் இப்போது தான் அது நடைமுறைப் படுத்தப்பட்டது என்றும் கூறப்படுகிறது. இந்த ஒளிபரப்புச் சேவையினை ஐரோப்பாவில் உள்ள பத்து லட்சத்துக்கும் அதிகமான வீடுகளில் பார்க்க முடிகிறது. 1993ஆம் ஆண்டிற்கு முன்பு உலகெங்கிலும் இச் சேவையை அவதானிக்கலாம் என பி. பி. ஸி. தெரிவித்துள்ளது.

## 1 படை பலி; 4 பேர் காயம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டம் முருங்கனில் விடுதலைப் புலிகளு (4 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் தொடர்ந்தும் பீரங்கி, ஷெல் தாக்குதல்

(காரைநகர்)

காரைநகர், பொன்னாலை, திருவடிநிலைப் பகுதிகள் மீது சிறிலங்கா கடற்படையினரின் பீரங்கிப்படகுகளில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவும் நேற்றுக்காலையும் இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. நேற்று முன் தினம் இரவு 8 00 மணியளவில் கோவளக் கடற் பகுதியில் தரித்து நிற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## எனக்கோ அரசாங்கத்திற்கோ போரில் நம்பிக்கையில்லை

### - பிரேமதாசா

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் இப்பொழுது முயற்சிகளை எடுத்து வருகிறது. தமக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ யுத்தத்தில் நம்பிக்கை இல்லை என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரணிய கலை மத்திய மகா வித்தியாலயத்தில் ஆண்டு விழாவில் பேசுகையில் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியை அரசாங்கம் கைவிடவில்லை என்று கூறினார்.

ஆயுதம் ஏந்திப் போராடுவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முடியாதுஎன்று தாம் முன்னமே கூறியதை ஞாபகப்படுத்திய ஜனாதிபதி உலகில் யுத்தத்தின் மூலம் எவரும் வெற்றி பெற்றது கிடையாது என்று கூறினார்.

யுத்தம் எந்த முறையிலும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உதவாது. சமாதானம் ஐக்கியம், கலந்துரையாடல் ஆகியவற்றின் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

இங்கு சகலரின் கோரிக்கைகள் எதிர்பார்ப்புகள், உணர்வுகள் ஆகியவைகளைப் புரிந்து கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கம் எப்போதுமே செயற்பட்டு வந்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு முத்திரைக்கான உணவு விநியோகம் தற்காலிக இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உணவு முத்திரைக்கான உணவு விநியோகங்கள் 5ஆம் உணவு முத்திரைத் தொடருடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி இலக்க உணவுமுத்திரைத்தொடருக்கான விநியோகங்கள் யாவும் கடந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நிறைவு செய்திருக்க வேண்டும் என்றும் இத்திகதிக்குப் பின்னர் மேற்படி தொடருக்கான விநியோகங்களை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கொடு (4 ஆம் பக்கம் பார்க்க)

## கைதடியில் ஹெலி தாக்கு

(சாவகச்சேரி)

கைதடிச்சந்தியில் நேற்றிரவு 7 மணியளவில் ஹெலியிலிருந்து தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலால் சேதமேதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. (மு)

## கேரதீவில் ஹெலிதாக்குதல்; மூன்று பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

கேரதீவு சங்குப்பிட்டியில் நேற்று மாலை மேற்கொள்ளப்பட்ட ஹெலித்தாக்குதலால் மூன்று பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 6.45 மணியளவில் கேரதீவு சங்குப்பிட்டியில் நின்ற பொதுமக்கள் மீது ஹெலியிலிருந்து தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வெள்ளி முதல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே வெள்ளிமுதல் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதுவரை 85,000 விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்ற போதிலும் 5000 பிறப்பு அத்தாட்சிப் பத்திரச் சான்றிதழ்களே கொழும்பிலிருந்து வந்துள்ளன. இவை கோரப்பட்ட விண்ணப்பித்த அனைவருக்கும் வழங்க முடியாத நிலையில் இருப்பதாகவும், அத்தியாவசியமாகத் தேவைப்படுவோருக்கு மட்டுமே வழங்கப்படும் எனவும் அதற்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்தார். (4 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சை மேற்பார்வையாளர் முன் ஆயத்த ஆவணங்களைப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த உயர்தரப் பரீட்சை வேலைக்கென நியமிக்கப்பட்ட பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் தமக்குரிய முன் ஆயத்த ஆவணங்களை வெள்ளிக்கிழமையன்று கல்வித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு (4 ஆம் பக்கம் பார்க்க)

## உண்மைக்குப் புறம்பானது ஆசிரியர் சங்கம் மறுப்பு

(நல்லூர்)

ஆசிரியைகள் மாணவனைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியதாகச் சொல்லப்படும் சம்பவம் உண்மைக்குப் புறம்பானது என்று தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் த. மகாசிவம் தெரிவிக்கிறார்.

இவ்வாறான செயலில் எந்த ஒரு தமிழ் ஆசிரியையும் ஈடுபடவில்லை என்பது தெளிவாகத் தமது விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

## யாழ். வைத்தியசாலைக்கு மருந்துவகைகள் வந்தன

யாழ். வைத்தியசாலைக்கென கப்பலில் வந்த மருந்துப் பொருள்களும், பிராணவாயு கொள்கலன்களும் நேற்று வைத்தியசாலையை வந்தடைந்துள்ளது. விசர்நாய்க்கடிக்கு மருந்து உட்பட எழுபத்தைந்து பிராணவாயு கொள்கலன்களும் மற்றும் ஊசி வகைகளும், மருத்துவ உபகரணங்களும் வந்து சேர்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (கோ)

## அறிவித்தல்

தொழிலாளர்கல்வி அனுமதி நேர்முகப் பரீட்சை

1989/90 ஆம் கல்வி ஆண்டுக்கான தொழிலாளர் கல்வி நெறிப் பயிற்சி அனுமதி நேர்முகப் பரீட்சை 1991-04-19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது. நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் சுட்டிலக்கங்கள் பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் 1991-04-18 ஆம் திகதி வியாழக்கிழமை வழமையான அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக தேர்வுகள் கிளையில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

1991-04-15 -பதிவாளர்

(B-2378)

## அறிவித்தல்

கல்விப் பட்டப்பின் டிப்ளோமா 1990/91

1990/91ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விப் பட்டப்பின் டிப்ளோமா பயிற்சிநெறி அனுமதித் தேர்வுப் பரீட்சை 1991-04-21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00மணிக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது. தகைமைகளை உடைய விண்ணப்பதாரர்களின் சொந்த முகவரிக்குத் தபாலில் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் 1991-04-19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழமையான அலுவலக நேரத்தில் பல்கலைக்கழகத் தேர்வுகள் கிளையில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

1991-04-15 -பதிவாளர்

(B-2377)

ஐரோப்பிய பொருளாதார சமூகம்

# தென். ஆபி. மீதான தடையை நீக்குவதென முடிவு

தென் ஆபிரிக்காவின் இருந்து நிலக்கரி, இரும்பு, உருக்கு, தங்க நாணயங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதன் மீது விதிக்கப்பட்டிருந்த ஐந்து ஆண்டுகாலத் தடையை நீக்கப்போவதாக ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் முடிவு செய்துள்ளன.

நேற்று முன்தினம் லக்சம்போர்க்கில் சந்தித்துப் பேசிய ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இந்த முடிவினை எடுத்துள்ளதாக பி.பி.ஸி தெரிவித்தது. இத்தப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான விதிமுறைகள் இந்தவார இறுதியில் நடைமுறைக்கு வரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக பிரித்தானிய தலைமையிலான சில ஐரோப்பிய நாடுகள் இன ஒதுக்கலுக்கு முடிவுகாண முயலும் ஜனாதிபதி டி. கிளார்க்கின் முயற்சிகளை ஊக்குவிக்கவும் தென் ஆபிரிக்கா அறிவித்துள்ள இன ஒதுக்கல் ஒழிவு நடவடிக்கைகளுக்கு பரிசு அளிக்கும் வகையிலும் தென் ஆபிரிக்கா மீதான பொருளாதாரத் தடைகள் சற்றுத் தளர்த்தப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டன.

இதே நேரம் தென் ஆபிரிக்காவுடனான வர்த்தகம், ஆயுத அணுசக்தி ஒத்துழைப்பு ஆகியவற்றின் மீதான ஐ.நா சபையின் தடைகளை ஐரோப்பிய சமூக நாடுகள் பேணி வரும் என்றும் அந்த அமைச்சர்கள் கூறியுள்ளனர்.

## 48ஆம் நாள் நினைவு அஞ்சலி



தாயின் மடியில்

02-08-1967

வீரமரணம்

01-03-1991

### கப்டன் ரஹீம

### (இராசதுரை கருணாகரன்)

அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

தேச விடுதலைப் பாசறை அமைத்து
பாவ பூமியில் எதிரியின் பாசறை உடைக்க
புவித்தேச விடுதலைப் போராளியாய்
புறப்பட்ட கப்டன் ரஹீமே
உன் பாசறைப் பணி தொடர
நாம் உன் பின்னே தலைசாய்த்து நிற்கிறோம்
விடுதலை ஆரம்ப காலத்தில் - நீ
அராலிப் பிரதேசம் தனைக் கொண்டாய்
ஆற்றிய சேவையின் அதிவேகம்
கப்டன் ரஹீமாய் களம் கண்டாய்
களத்தில் மேதையாய் ரஹீம் உன்னை
கணிப்பிப் போயினோம் நாம் இங்கு!

அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. —குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

(B 2373)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



ஈன்ற மாதாவின் மடியில்

05-05-1973

ஈழமாதாவின் மடியில்

19-03-1991

19-03-1991 அன்று கொக்குப்படையான் - சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரமரணமடைந்த

### லெப்டினன்ட் புலவர்

(தர்ஷன் யோகசாமி செந்தூரன்)

(முன்னாள் வல்வை - தொண்டைமானாறு பிரதேசப் பொறுப்பாளர்)

ஈழமகன் விலங்கொடிக்க இன்பமுடன் களம்சென்ற
எங்கள் மகன் தூங்குகிறான் ஆராரோ
புலவரவன் தூங்குகிறான் தாலேலோ!
அவன
என்னாளும் மண்ணாரில் எங்கள் கொடி பறந்திடவே
தன்னுயிரை உவந்தளித்தான் பாரீரோ!
தன் இன்னுயிரைத்தான் கொடுத்தான் சேவீரோ
மண் மகளை மீட்டுவிட்ட மனமகிழ் சில தர்ஷனவன்
மனமுவந்து தூங்கிவிட்டான் பாரீரே!
அவன் பணியைத் தொடர்ந்திடவே வாரீரோ!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (18. 04. 91) அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நடராசா வீதி, வல்வெட்டித்துறை. தாய், தந்தை, உடன்பிறந்தோர், உறவினர்கள், உறவினர்கள்.

(R-1330)

## நினைவு கூருகின்றோம்...

1991-04-17

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் எமது முகாமொன்றில் ஏற்பட்ட தற்செயலான விபத்தில் எமைப்பிரிந்த

அன்பு (முத்துத்தம்பி தனபாலசிங்கம் - வெற்றிலைக்கேணி)

இதே ஆண்டு வீரமரணமடைந்த

★சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை (திரவெளி)

1986 ஆம் ஆண்டு நாவற்குழியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த

லெப் ஜெரி (சுப்பிரமணியம் யோகராசா-சாவகச்சேரி)

1988 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரமரணமடைந்த

கப்டன் டேவிட் (சுந்தசாமித்துரை சிவகுமார் - பருத்தித்துறை)

இதே ஆண்டு வீரமரணமடைந்த

தபா (கா. தியாகராசா)

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளால் சுட்டுக் கொல்லப்பட்ட

★ செல்லத்துரை சத்தியநாதன் (காரைதீவு)

★ கிருஷ்ணபிள்ளை ஜெகன் (கட்டைபறிச்சான்)

1989ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரால் கொல்லப்பட்ட

ரஞ்சித் (பொன்னுச்சாமி குமரேஸ்வரன் குமரகோட்டம், கோண்டாவில்)

ஆகியோரை

இந்நாளில் நினைவு கூருகின்றோம்;

★ மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2375)


## இன்றைய சேமிப்பு நாளைய சந்ததியின் பாதுகாப்பு

உங்கள் குழந்தையின் எதிர்காலம் வளமானதாக அமைய

இன்றே "ஷப்றாவுடன்" இணைந்து சேமியுங்கள்.

நிதித் துறையில் நேசக்கரம் நீட்டும் நண்பன்

"ஷப்றா" யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,

2 ஆர் ஏ. டி. மெல் மாவத்தை, கொழும்பு - 04. தொலைபேசி எண்- 508087- 90

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(B/2376)

